(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 27.]

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 பெப்ரவரி 25, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் மாவனெல்லை பிரதேசத்தில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் பதிவாகிய திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி சம்பவத்திற்காக கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தை விசாரணை செய்த பாதுகாப்பு அலுவலர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோது அந்தப் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அழுத்தம் பிரயோகித்த அப்போதைய ஆளுநர்கள் மற்றும் அரசாங்கத்தில் பலம்வாய்ந்த நபர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

62/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை மாத வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வழங்குவற்கு அறவிடப்படும் கட்டணம் யாதென்பதையும்;

(iii) சாதாரண சேவையின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு துரிதமாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

66/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று – வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் சட்ட விரோதமாக இல்மனைட் அகழ்வு மேற்கொள்ளப் படுகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் குடிநீர் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படக் கூடுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், சட்ட விரோதமாக மேற்கொள்ளப்படும் இல்மனைட் அகழ்வுச் செயற்பாடுகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

82/2024

கௌரவ ரோஹண பண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வசமுள்ள விமானங்களின் எண்ணிகை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனம் எவ்வெவ் விமானச்சேரிடங்களுக்கு சேவையை வழங்குகிறது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தை மேலும் வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

90/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அரிசி எந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி அரிசியை இறக்குமதி செய்த நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) அரிசி இறக்குமதியைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள், இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளிலிருந்தும் 2025 பெப்ரவரி 06 திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட ஏழாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 பெப்ரவரி 17) [1].

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 நவம்பர் 22 ஆம் திகதிய 2411/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.